# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

**SUMMATIVE ASSESSMENT - I ( 2014-2015 )**

**Class : VII** | **Tamil** | **ஏழாம் வகுப்பு**

**Time : 3 hours** | **தமிழ்** | **நேரம் - 3 மணி**

**Marks : 90** | **மதிப்பெண்கள் - 90**

**பிரிவு - அ**

**1 ) கொடுக்கப்பட்டுள்ள உரைநடையைப் படித்துப் பொருளுணர்ந்து கேட்கப் பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஓவியம் என்பது வண்ணத்தால் ஓர் உருவத்திற்கு எண்ணத்தையும் கலந்து உருவம் கொடுப்பதாகும். அ.்.து ஓர் அரிய கலை. மதுரைக் காஞ்சியில் மாடமாளிகைச் சிற்பங்கள் பற்றிய வருணனைகள் உள்ளன. மணிமேகலையும் " புனையா ஓவியம் " என்னும் தொடரைக் கையாண்டிருக்கிறது. பிற்காலத்தில் சித்தன்ன வாசல், குடுமியான் மலை சித்திரங்கள் வியப்பை அளிப்பவை. நம்முடைய திருக்கோயில்கள் சித்திரங்களுக்காகவும், கலைகளுக்காகவும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை ஆகும். சிற்பக்கலை, கல், மண், செம்பு, பொன் என்று பல்வேறு பொருள்களால் வடிவம் பெற்று, உலகத்தில் உள்ளோரை வியப்பிலாழ்த்துகிறது. சிற்பக்கலை பல்லவர்கள் காலத்திலும், பிற்காலச் சோழர்கள் காலத்திலும் மிகச்சிறப்புடன் விளங்கியது. மாமல்லபுரம் , தஞ்சை பெரியகோயில், ஐராவதீசுவரர் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஆகியவை இன்றும் தமிழனின் சிற்பக்கலையின் பெருமையைப் பறைசாற்றும் பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன.

**வினாக்கள்** **10**

**i )** ஓவியம் என்றால் என்ன ?

**ii )** திருக்கோயில்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை. ஏன் ?

**iii )** தமிழனின் சிற்பக்கலையின் பெருமையைப் பறைசாற்றும் பொக்கிஷங்களாகத் திகழ்பவை எவை ?

**iv )** சிற்பங்கள் செய்ய பயன்படும் பல்வேறு பொருட்களை எழுதுக.

**v )** மாடமாளிகைச் சிற்பங்கள் பற்றிய வருணனைகள் இடம்பெற்ற நூல்

அ) மணிமேகலை ஆ) மதுரைக்காஞ்சி

இ ) தொல்காப்பியம் ஈ ) பாஞ்சாலி சபதம்

**vi )** வியப்பில் ஆழ்த்தும் ஓவியங்கள் இடம்பெற்ற இடம்

அ) சித்தன்னவாசல் ஆ) கோடியங்கரை

இ ) முதுமலைக்காடுகள் ஈ ) நரிமேடு

2 ) **கடிதம் எழுதுக.** **8**

விடுதியில் தங்கியிருக்கும் நீ சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம் எழுதுக.

3 ) **கட்டுரை எழுதுக.** **8**

நான் விரும்பும் கவிஞர்

<u>பிரிவு - ஆ</u>

4 ) **பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 3 x 1 = 3

**i) அண்மைச்சுட்டு**

அ) அது ஆ) இது

இ ) அவை ஈ ) எவை ?

**ii) அகவினா**

அ) எவன் ? ஆ) எம்மனிதன் ?

இ ) எப்புத்தகம் ? ஈ ) எக்குடிசை ?

**iii) ஒரு மாத்திரை**

அ) பாடல் பாடும் நேரம் ஆ) நடனம் புரியும் நேரம்

இ ) உணவு உண்ணும் நேரம் ஈ ) கண் இமைக்கும் நேரம்

5 ) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.** 3 x 1 = 3

i) இருதிணை என்பது __________ .

அ) நல்வினை, தீவினை ஆ) உயர்திணை, அ∴றிணை

இ ) இம்மை, மறுமை ஈ ) உண்மை, பொய்மை

ii) சொல்லுக்கு வெளியே நின்று வினாப்பொருளைக் காட்டுவது __________ .

அ) அகவினா ஆ) அகச்சுட்டு

இ ) புறவினா ஈ ) புறச்சுட்டு

iii) இ - என்னும் எழுத்து __________ உள்ள பொருளைச் சுட்டும்.

அ) தொலைவில் ஆ) சேய்மையில்

இ ) தூரத்தில் ஈ ) அருகில்

6 ) **அடைப்புக்குறிக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.**

**i) யானை** ( சுட்டுத்திரிபு ஆக்குக ) 3 x 1 = 3

அ ) வந்த யானை ஆ) எந்த யானை

இ ) இந்த யானை ஈ ) கோவில் யானை

**ii) இராமனோ ?** ( வினா எழுத்து எங்கு இடம் பெற்றுள்ளது ? )

அ ) சொல்லின் முதலில் ஆ) சொல்லின் முடிவில்

இ ) சொல்லின் இடையில் ஈ ) சொல்லின் நடுவில்

**iii) ஔவை** ( மாத்திரை கூறு )

அ ) இரண்டு ஆ) மூன்று

இ ) நான்கு ஈ ) ஐந்து

**7 ) பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**i ) உண்ணல், தின்னல், பருகல், நக்கல்** **3 x 1 = 3**

அ ) நால்வகை உணவு ஆ) நாற்படை

இ ) நானிலம் ஈ ) நாற்குணம்

**ii ) இக்கனி**

அ ) அகச்சுட்டு ஆ) புறச்சுட்டு

இ ) சுட்டுத்திரிபு ஈ ) தொகைச்சொல்

**iii ) ஆறு மாத்திரை**

அ ) வானவில் ஆ) பௌர்ணமி

இ ) நிலக்கோட்டை ஈ ) செங்கோட்டை

**8 ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

**i)** அ) **உ** கரத்தால் சுட்டும் முறை தற்போது வழக்கத்தில் இல்லை.

ஆ) **அ** கரத்தால் சுட்டும் முறை தற்போது வழக்கத்தில் இல்லை.

இ) **இ** கரத்தால் சுட்டும் முறை தற்போது வழக்கத்தில் இல்லை.

**ii)** அ) சொல்லின் முதலிலும், இறுதியிலும் வந்து வினாப்பொருளை உணர்த்தும் எழுத்து- **எ**

ஆ) சொல்லின் முதலிலும், இறுதியிலும் வந்து வினாப்பொருளை உணர்த்தும் எழுத்து- **யா**

இ) சொல்லின் முதலிலும், இறுதியிலும் வந்து வினாப்பொருளை உணர்த்தும் எழுத்து- **ஏ**

**iii)** அ ) மெய் எழுத்தின் மாத்திரை அரை ஆகும்.

ஆ ) மெய் எழுத்தின் மாத்திரை ஒன்று ஆகும்.

இ ) மெய் எழுத்தின் மாத்திரை இரண்டு ஆகும்.

## பிரிவு - இ

9 ) **கீழ்காணும் உரைநடையைப் படித்துக் கீழே கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

அதோ குளம்! அங்குச்சென்று நீர் அருந்தலாம் என எண்ணிக் குளத்தை அடைந்தேன். குளம் தூய்மையற்று இருந்தது. குளத்தில் குப்பைக் கூளங்கள், நெகிழிப் புட்டிகள், நெகிழிப் பைகள் மிதந்து கொண்டிருந்தன. குளத்து நீர், பாசி படர்ந்து நுரைத்துக் கழிவு நீர் போல விரும்பத் தகாத கெட்ட மணம் வீசியது. குளத்தைச் சுற்றியுள்ள மரங்கள் வெட்டப்பட்ட நிலையில் மொட்டை மரங்களாகக் காட்சி அளித்தன.

காடு செழித்தால் மழை பொழியும்
மழை பொழிந்தால் மண் குளிரும்
மழை பெற மரங்கள் வேண்டும்

என்பதை அறியாமல் மனிதர்கள் இத்தவறுகளைச் செய்கிறார்கள். என் நீர் வேட்கையை எவ்வாறு தணிப்பது ? வேதனையுடன் பறந்தேன்.

**வினாக்கள்** **5 x 1 = 5**

**i )** காடு செழித்தால் ______________.

அ) மழை பொழியும் ஆ) இடப்பற்றாக்குறை ஏற்படும்
இ) விலங்குகள் இடம்பெயரும் ஈ) வெயில் மிகுதியாகும்

**ii )** நெகிழி என்பது ________________ .

அ) தாது உப்பு ஆ) ஒருவகை காளான்
இ) இலை தழைகள் ஈ) பிளாஸ்டிக்

**iii )** குளம் ________________ இருந்தது.

அ) ஆழமாக ஆ) தூய்மையாக
இ) தூய்மையற்று ஈ) நீர் இன்றி வறண்டு

**iv )** நீர் அருந்துதல் என்பதன் பொருள் ______________.

அ) தண்ணீர் தட்டுப்பாடு ஆ) தண்ணீர் தாகம்
இ) தண்ணீர் குடித்தல் ஈ) தண்ணீரில் குளித்தல்

**v )** குளத்தைச் சுற்றியுள்ள மரங்கள் ______________ காட்சியளித்தன.

அ) விண்ணை முட்டும் உயரத்தில் ஆ) மொட்டை மரங்களாக
இ) பறவைகள் மிகுந்து ஈ) பச்சைப்பசேலென்று

10 ) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

**i ) முகடு என்பதன் பொருள்**

அ) உயரம் ஆ) நீளம்
இ) உச்சி ஈ) அகலம்

**ii ) முகர்ந்து பார்த்தாலே வாடும் மலர்**

அ) சூரியகாந்தி மலர் ஆ) அனிச்சமலர்

இ) முல்லை மலர் ஈ) குறிஞ்சி மலர்

**iii ) நல்லனவற்றைக் கேட்பதனால் கிடைப்பது**

அ) கயமை ஆ) சிறுமை

இ) பெருமை ஈ) வறுமை

**iv ) யானையைக் குறிக்கும் வேறு சொல்**

அ) பரி ஆ) மந்தி

இ) கரி ஈ) கவி

**v ) டன்** என்பது __________.

அ) பத்து கிலோ ஆ) நூறு கிலோ

இ) ஐநூறு கிலோ ஈ) ஆயிரம் கிலோ

**11 ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 x 1 = 5**

i ) வண்டுகள் __________ எழுப்பும்.

ii ) நுட்பமாகக் கேட்டறியும் திறனைப் பெற்றவர் ________ பேசுபவராக இருப்பர்.

iii ) **அகழி** - என்ற சொல்லின் பொருள் _________.

iv ) சாயப் பட்டறைகளிலிருந்து __________ நீரில் கலக்கின்றன.

v ) **களஞ்சியம்** - என்ற சொல்லின் பொருள் _________.

**12 ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**அ) பொருள் தருக.** **4 x 1/2 = 2**

i ) தரணி iii ) அமிலப்புகை

ii ) விசும்பு iv ) வைகலும்

**ஆ) பிரித்து எழுதுக.** **4 x 1/2 = 2**

i ) கருங்கோடு iii ) வாயினராதல்

ii ) நெற்களஞ்சியம் iv ) கடற்கரை

**இ ) சேர்த்து எழுதுக.** **4 x 1/2 = 2**

i ) காடு + எருமைகள் iii ) நீர் + ஓடை

ii ) உலகு + எனின் iv ) தெய்வம் + சிற்பங்கள்

**ஈ ) பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.** **4 x 1/2 = 2**

i ) யாழினி ______ உயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தாள் ( விலை / விளை )

ii ) எலி __________ வாழ்கிறது. ( வலையில் / வளையில் ).

iii ) பள்ளி மணி ________ . ( ஒலித்தது / ஒளித்தது )

iv ) பலம் இல்லையென்றால் ________ தூக்க முடியாது. ( பளு / பழு )

**உ ) பிழைகளை நீக்கி எழுதுக.** **8 x 1/4 = 2**

அதிகாளையில் கோலி கூவும். கதிரவண் உதயமாகும் பொலுது நாம் கண் விலிக்க வேண்டும். ஆதுவே மிகச் சிறந்த பலக்கமாகும்.

**ஊ ) தொடர் அமைத்து எழுதுக.** **2 x 1 = 2**

i ) எண்ணியெண்ணி ii ) விண்ணில்

**எ ) வேறுபாடு அறிந்து பொருள் எழுதுக.** **2 x 1 = 2**

கலை

களை

**ஏ ) ஒத்த ஒலிப்புடைய சொற்றொடர்களை எழுதுக.** **2 x 1 = 2**

i ) பள்ளி சென்றாள் செல்வி - அங்குப்

______________________________

ii ) அம்மா சென்றாள் சந்தை - அங்கே

______________________________

**13 ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.** **3 x 3 = 9**

அ) தொழிற்சாலைகள் வெளிவிடும் புகையால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

ஆ ) மழை பெய்யாவிடில் ஒழுக்கம் கெடும் எவ்வாறு ?

இ ) கோயிலில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ள உருவங்கள் எவை ?

**14 ) ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.** **1 x 5 = 5**

அ) மங்கை கண்ட இயற்கை வளம் பற்றி கூறுக.

ஆ ) தஞ்சைக் கோயிலில் உள்ள நந்திச்சிலை பற்றி எழுதுக. இராசராசன் வாயிலின் சிறப்பு யாது ?

**15 ) அடிபிறழாமல் எழுதுக.** **2 x 2 = 4**

அ ) எனைத்தானும் - எனத் தொடங்கும் திருக்குறள்

ஆ ) விருந்து - என முடியும் திருக்குறள்.